

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.7.2024) தலைமைச் செயலகத்தில், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர். ஈஸ்வரன் சந்தித்து, திருச்செங்கோடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வளாகத்தில் பணியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## தமிழ்நாட்டில் ஒரே நாளில்

# 36.09 லட்சம் லிட்டர் பால் அதிகபட்சமாக கொள்முதல்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தகவல்!

சென்னை, ஜூலை 24-

தமிழ்நாட்டில் 21.07.2024 அன்று ஒரே நாளில் மட்டும் 36.09 இலட்சம் லிட்டர் பால் அதிகபட்சமாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 21.07.2024 அன்று அதிகபட்ச பால் கொள்முதலாக 36.09 இலட்சம் லிட்டர் பால், 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மூலம் ஆவின் கொள்முதல் செய்துள்ளது. மேலும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உள்ளூர் விற்பனையான 4 இலட்சம் லிட்டர் பால் கணக்கில் கொள்ளும்போது தமிழ்நாட்டில் பால்வளத் துறை மூலமாக 40 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது 2,800 மெ.டன் வெண்ணெய்யும், 4,200 மெ.டன் பால் பவுடரும் கையிருப்பில் உள்ளது. மேற்காணும் கையிருப்பைக் கொண்டு எதிர் வரும் பண்டிகை காலங்களுக்குத் தேவையான பால் பொருட்களை பொது மக்களுக்கு தங்கு தடையின்றி விநியோகம் செய்வது உறுதி செய்யப்படும்.

மேலும் பொதுமக்களுக்கு ஆவினின் அனைத்து வகையான பொருட்களும் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் தயிர் மற்றும் பன்னீர் விற்பனையை அதிகரிக்கும் வகையில் மாவட்டம் தோறும் மொத்த விற்பனையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் த. மனோ தங்கராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (22.07.2024) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 348வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் த.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வ.தட்சிணாமூர்த்தி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.








தொகுதிப் பார்வையாளர்கள் சந்திப்புக்கு, நன்றி !

மாண்புமிகு கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மிகச்சிறப்பாக தேர்தல் பணிகளை மேற்கொண்டு, நாற்பதுக்கு நாற்பது என்ற வெற்றி இலக்கை அடைய உதவிய தொகுதிப் பார்வையாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு கழக இளைஞரணிச் செயலாளருடன் இணைந்து சட்டமன்ற தேர்தலுக்கான ஒருங்கிணைப்புக் குழுவினர், மாண்புமிகு அமைச்சர் திரு.கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் திரு.ஆர்.எஸ்.பாரதி, மாண்புமிகு அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு ஆகிய குழுவினர் முன்னிலையில்

தொகுதி பார்வையாளர்களுக்கு சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள குறிஞ்சி இல்லத்தில் பாராட்டு தெரிவிப்பதற்காக உத்தரவிட்டுள்ள கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி நன்றி நன்றி

12 ம் வருடம் வந்ததும் பூத்துக்குலுங்கி குதூகலிக்கும் குறிஞ்சி பூக்கள் கொடைக்கானலில். தொகுதி பார்வையாளர்களின் 12 மாத பணிக்கு மகிழ்ச்சி பொங்க மனம் குலுங்கும் பாராட்டு விழா இன்று குறிஞ்சியில்.

இந்திய கூட்டணியின் வெற்றி பதார்த்தங்களை தொடர்ந்து தயாரித்து துவழாமல் பரிமாறும் தொடர் வெற்றி வீரர் நம் கழகத் தலைவர் அவர்கள்.

சுவைக்கு போடப்பட்ட இந்த உப்புகளுக்கு இவ்வளவு உபசரிப்பா, பாராட்டா... குறிஞ்சியில்...இன்று.

தொகுதி ஒன்றுவிடாமல் இளங்கன்று போல் சுற்றிச்சுழன்று சுவையாக, விளையாட்டாக, பேசி வெற்றிக்குப்பாடுபட்ட நம் இளந்தலைவர் மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி, நன்றி !

பாராளுமன்ற தேர்தல் பொறுப்பு குழுவாக இருந்து களப்பணிகளை வெகுசிறப்பாக ஆய்வு செய்து வழிநடத்தி 40/40 வெற்றியும் பெற்று இன்று சட்டமன்ற தேர்தலுக்கு வழிகாட்ட வந்திருக்கும் ஒருங்கிணைப்பு குழுவினருக்கும் நன்றி, நன்றி...

தொகுதி பார்வையாளர்களில் ஒருவரான திரு. அன்னியூர் சிவா அவர்களுக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, சென்ற சட்டமன்றத் தேர்தலை விட இந்த இடைத் தேர்தலில் 60 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று, அதிரடியாக, அபார வெற்றியினை ஈட்டித் தந்த, மாண்புமிகு கழகத் தலைவர்

மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

குறிஞ்சிக்கு வருகைத்தரும் தொகுதி பார்வையாளர்கள் அனைவரையும் வரவேற்று மகிழும்...

அக்ரி கணேசன்

ஒரத்தநாடு தொகுதி பார்வையாளர்

கழக தீர்மான குழு செயலாளர் அண்ணா அறிவாலயம், சென்னை.



